உ

சிவமயம்

''மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகெலாம்''

சிவம்

''கோவளச் சிவப்பெருந்துறைசேர் காரைதீபமென்றுஞ் செழிக்க
தவள நீறுமைந் தெழுத்தும் தீர்த்தஞ்சேர் காரைதீபஞ் செழிக்க
கூவிளம் வீழிசூழ் மடாலயஞ்சேர் காரைதீபமென்றுஞ் செழிக்க
காவளமாய் சிவஞானி போற்றும் காரைதீபமென்றுஞ் செழிக்கவே''

சிவம்

காரைதீபச் சிவபூமியில் வாழ் சைவப் பெருமக்களே, உங்கள் யாவருக்குமோர் வேண்டுகோள். கோவளப் பெருந்துறையைச் சிவப்பெருந்துறையாக்கி வைத்த சைவமுனி, சைவசித்தாந்த கலங்கரை தீபம், காரைதீபம் சைவ உலகிற்களித்த ஞானதீபம் சுவாமி முருகேசப் பெருமானை யாவருமறிந்திருப்பீர்கள். காரைதீபத்தின் வித்தியாகுருவும், ஞானகுருவுமாக விளங்கியவர் சுவாமி முருகேசப் பெருமான். இலங்கையிலிருந்து கங்கை தாண்டி பசுபதிநாத், அமர்நாத் வரை யாத்திரை செய்து எட்டு வருடம் 'பசித்திரு, விழித்திரு, தனித்திரு' என்றவாறு தவமியற்றிச் சிவயோகம் புரிந்தவர். அகஸ்தியர் முற்காலத்தில் ஆச்சிரமமமைத்து வீற்றிருந்த காரைதீபத்தில்தான் சுவாமி முருகேசப்பெருமானும் ஆச்சிரமம் அமைத்து வாழ்ந்துவந்தார். அபிடேகம், சிவபூசை, கோபூசைகள் நடாத்தி வந்ததுடன் காரைதீபம் வாழ் பிள்ளைகளுக்கு கணிதம், ஆங்கிலம், சமஸ்கிருதம் கற்பித்துவந்தார்.

திருஞானசம்பந்த சுவாமிகள் திருநீற்றால் பாண்டியன் வெப்புநோய் தீர்த்து வைத்ததுபோலவே திருநீற்றினால் மக்களின் நோய் தீர்த்தவர். எழுகடற்றீர்த்தம் வரவழைத்து அடியார்களைத் தீர்த்தமாடப் பண்ணியே திருநீறு கொடுப்பது வழக்கம். பாவத்தை தீர்த்தத்தால் கழுவி திருநீற்றால் நோயையெரிப்பார். இங்ஙனம் நோய் தீர்ந்தவர்கள் எண்ணில எண்ணில. இலங்கையிலுமிந்தியாவிலும் வாழ்ந்தவர்களதிகம்.

சுவாமியை நாடி இந்தியா, இலங்கையிலிருந்து வந்தவர்களநேகம் பேர். மேலைத் தேசத்தினரின் பிடியிலகப்பட்டுக் கலங்கிய சிவபூமியாகும் பரத கண்டமொடிலங்கையை மீட்டெடுக்கக் காந்தி முனிவனையும், காந்தி முனிவனின் விமோசனத்திற்காக கதிர்காம முருகனினம்சமாக சுவாமி முருகேசப் பெருமானையும் கைலாயபதி பூமிக்கனுப்பிவைத்தார். சிவமாயையினாலுலகிற்கு மானுடன் போலவே காட்டி சிவபூமியாமிலங்கையொடு பரத கண்டத்தை மீட்டெடுத்தும், சைவசித்தாந்த ஸ்தாபனம் பண்ணியும்வைத்தார்.

சுவாமிஜி இந்தியாவின் சுதந்திரகட்ட காலத்தில் வாழ்ந்த காந்திஜி, J.C. குமரப்பா, தேவதாஸ் காந்தி, வல்லபாய் பட்டேல், திரு. ராஜேந்திரபிரசாத், திரு. முன்ஷீ, திரு. V.V. கிரியாகியவர்களுடன் தொடர்புடையவர். Dr. J.C. குமரப்பாவின் Blood pressure என்னும் நோயை தீர்த்தம் + விபூதியால் குணப்படுத்தியவர். இந்திய அரசின் ஆணைப்படி இலங்கையில் இந்திய உயர்ஸ்தானிகராகவிருந்தபோது ஆச்சிரமத்திற்கு திரு. V.V. கிரி விஜயஞ்செய்து சுவாமிஜிக்கும், ஆச்சிரமத்திற்கும் மரியாதை வழங்கினார், சுவாமிஜியின் ஆசீர்வாதத்தினால் பிற்காலத்தில் President ஆக வந்தார். இவருடைய வம்சாவளியில் வந்தவோர் பெண்குழந்தையின் ஊமைத் தன்மையை மாற்றிப் பேசவைத்தார் சுவாமிஜி.

இந்தியாவின் சுதந்திர தினத்தை பிரதமமந்திரியாகவிருந்த திரு. நேரு, நல்ல காரியங்களுக்கு உதவாத 'இருத்தை' **என்னும்** அசுப நேரத்தினை தெரிவுசெய்தார். இந்தியாவின் நன்மை கருதி சுவாமிஜி, அப்போது ஜனாதிபதியாக நியமனம் செய்த திரு. இராஜேந்திர பிரசாத் மூலம் ஜனாதிபதி மாளிகையில் இந்திய தேசியக் கொடியை **அந்த நேரத்துக்கு** முன்னரே நல்ல சுபநேரத்தில் ஏற்றுவித்தார்.

இலங்கையரச அதிகாரிகள், சமயப் பெரியார்கள், சமூக உயரந்தஸ்திலுள்ளவர்கள் எல்லாம் சுவாமிஜியிடம் விஜயம் செய்தனர். Hindu Board இராஜரட்ணம், Crown அப்புக்காத்து முத்துச்சாமி, வேலணை Sir துரைசாமி, அவருடைய மருமகன் Proctor சிவஞானம், Proctor மகேசன், அப்புக்காத்து சூரசங்காரம், Fiscal துரையப்பா, வேலணை மணியகாரர், யாழ் போதனா வைத்தியசாலை டாக்டர்கள் பொலிஸ் சுப்பிரின்டென்ற் இராமநாதன், Army பிரிகேடியர்ஸ் என்று பட்டியல் நீண்டுகொண்டுபோகும்.

இத்தகைய சிவஞானதீபம் வாழ்ந்த வெளிச்சவீட்டடி, டாக்டர் பரமசாமி வளவிலுள்ள ''கந்தபுஸ்கரணி தீர்த்தம்'' எனப்படும் தீர்த்தக் கிணறு, சிங்கப்பூர் சின்னத்தம்பி வளவிலிருக்கும் ''பொற்றாமரைத் தீர்த்தம்'' எனப்படும் தீர்த்தக் கிணறு, எழுகடற்றீர்த்தம் வருவித்துலகோர் தீர்த்தமாடிப் (பெரும்பாலும் காரைதீவு மக்கள்) பாவங்கழுவத் தந்தருளிய தீர்த்தக்கரை, ஆச்சிரமம் பிடுங்கியபின் வாழ்ந்த கொல்லங்கலட்டியிவை யாவும் பாதுகாக்கப்பட வேண்டிய சிவசொத்துக்களாம். கொல்லங் கலட்டியெனும் வளவில் சுவாமிஜியின் சமாதிக் கோயிலிருக்கிறது. இது ஒரு தீபமேனுமில்லாமல் இருளில் மூழ்கிக் கிடக்கிறது.

சுவாமி சமாதியாக முன்பு கொல்லங்கலட்டியிலிருந்து தீர்த்தக்கரைக்குச் சென்ற பாதையும், அவர் வாழ்ந்த பிரயோகித்த புண்ணிய வெளிச்ச வீட்டிலிருந்து தீர்த்தக்கரை வரையான பாதையும், தீர்த்தக் கிணறுகள் போன்றனவெல்லாம், புண்ணிய பூமியாக புனிதப் பிரதேசமாகவும் பிரகடனப்படுத்த வேண்டிய கடமை காரைதீபச் சைவப் பெருமக்களாகிய உங்களுக்கேயுரியது. ''சுவாமி முருகேசப் பெருமான் அறக்கட்டளை'' எனும் ஸ்தாபனம் சுவாமியின் கட்டளைப்படி சுவாமிஜியின் அடியார் கூட்டத்தினால் ஆரம்பிக்கப்பட்டுச் செயற்பட்டுவருகிறது.

காரைதீபச் சைவப் பெருமக்களே! இவ்விடயத்தில் (புனிதப் பிரதேசம் ‚ புண்ணியப் பிரதேசம் ஆக்குவதில்) அறக்கட்டளையினர்க்கு ஆதரவு கொடுத்து ஊக்குவியுங்கள். எண் திசைகளிலுமில்லாத, எங்கும் எப்போதும் கேள்விப்படாத, என்றும் கண்டறியாத, கேட்டறியாத, சோமசுந்தரப் பெருமான் மீனாட்சியம்மையுடன் வீற்றிருந்த மடாலயம், தெய்வீக வைத்தியாலயம், குருகுலம் நடாத்திய சுவாமி முருகேசப் பெருமானையுலகிற்களித்த சிவபூமியிதுவாம். இப்புண்ணிய பூமியைக் கட்டிக் காக்கும் பொருட்டு இன்றும் இன்னே எழுக. எழுந்து அறக்கட்டளையுடன் இணைந்து செயற்படுங்கள். உங்களது எதிர்காலச் சந்ததியினரும் சுவாமியை, சுவாமியின் மடாலயத்தை, எழுகடற்றீர்த்தப் பெருமை, சைவ சித்தாந்த மணம்வீசும் சிவபூமி, சோமசுந்தரப் பெருமான் மீனாட்சியம்மையுடன் வீற்றிருந்த புனிதப் பிரதேசப் பெருமையையறிய வேண்டும். உமாபதிசிவத்தைப் போன்ற சைவசித்தாந்த ஞானி தவஞ்செய்த புண்ணிய பிரதேசத்தைப் பாதுகாத்து அறக்கட்டளையிடம் கையளிக்கும்படி தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றோம்.

நன்றி

''மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகெலாம்''

அறக்கட்டளையினர்,

அடியார்கூட்டம்